//தனி கவனம்//

வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண்.3434/அ3/2023 நாள். 06.06.2024

---

பொருள் : பள்ளிக் கல்வி – சார்நிலைப் பணி – வேலூர் மாவட்டம், அரசு / நகரவை உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் 01.08.2023 நிலவரப்படி மாணாக்கர்களின் எண்ணிக்கைக்கேற்ப முதுகலை/பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் நிர்ணயம் செய்த விவரங்கள் சரிபார்க்க தெரிவித்தமை – **பணிநிரவல் மாறுதல் கலந்தாய்வில் கலந்துக் கொள்ள தெரிவித்தல்** – தொடர்பாக.

பார்வை :

1. சென்னை–6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.48800/சி3/இ1/2023 நாள்.30.05.2024.
2. சென்னை–6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.04174/W2/இ3/2023 நாள்.31.05.2024.
3. இவ்வலுவலக இதே எண்ணிட்ட செயல்முறைகள், நாள்.03.06.2024.

வேலூர் மாவட்டத்திலுள்ள அரசு / நகரவை உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் 01.08.2023 நிலவரப்படி மாணாக்கர்களின் எண்ணிக்கைக்கேற்ப முதுகலை/பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் நிர்ணயம் செய்யப்பட்டது. பார்வை(1) மற்றும் (2)இல் காணும் செயல்முறைகளின்படி ஆசிரியருடன் கூடிய உபரி பணியிடங்களை கூடுதல் தேவையுள்ள பள்ளிகளுக்கு பணிநிரவல் மாறுதல் (Deployment Counselling) கலந்தாய்வு நடத்திட தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, ஆசிரியருடன் கூடிய உபரி பணியிட விவரங்கள் பார்வை (3)இல் காணும் 03.06.2024 நாளிட்ட செயல்முறைகளின் மூலம் பள்ளிகளுக்கு தெரிவிக்கப்பட்டு, விவரங்கள் சரிபார்த்து சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர் மற்றும் சம்மந்தப்பட்ட ஆசிரியர்களிடம் சான்று பெறப்பட்டது. தற்போது உபரி பணியிடங்களில் பணிபுரியும் ஆசிரியர்களின் விவரங்கள் முன்னுரிமை (Seniority & Priority) அடிப்படையில் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்கள் இப்பொருளில் தனிக்கவனம் செலுத்தி இணைப்பிலுள்ள தங்கள் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் முன்னுரிமை விவரங்களை சரிபார்த்து உறுதி செய்து கொள்ளவும், திருத்தங்கள் ஏதுமிருப்பின் இவ்வலுவலகத்திற்கு 07.06.2024அன்று பிற்பகல் 02.00மணிக்குள் தெரிவிக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் **வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுலவகத்தில்** நடைபெறும். பணிநிரவல் கலந்தாய்வில் கலந்துக்கொள்ள ஏதுவாக **சார்ந்த ஆசிரியர்களுக்கு தெரிவித்து, பணியிலிருந்து விடுவித்து** அனுப்பி வைக்க அரசு / நகரவை உயர் / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

**இடம் – மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகம், வேலூர்.**

1. **முதுகலை ஆசிரியர் பணிநிரவல் கலந்தாய்வு 10.06.2024 அன்று காலை 09.00மணிக்கு**
2. **பட்டதாரி ஆசிரியர் பணிநிரவல் கலந்தாய்வு 11.06.2024அன்று காலை 09.00மணிக்கு**

இணைப்பு : ஆசிரியர்களின் பெயர்ப்பட்டியல்

//ஒப்பம் //
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.